★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 5563[illegible]

# நம் நாடு

தி. மு. க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 21உ வெள்ளி (3—2—56) ★ ★ வெளியூர்: தை 22உ சனி (4—2—56) [இதழ் 199

## விவசாய உற்பத்தி குறையாமலிருக்க......

சென்னை, பிப். 2—

விவசாய உற்பத்தி குறையாமலிருப்பதற்காகவும், விவசாயிகள் நிலத்தையோ விவசாய வேலைகளையோ புறக்கணிக்காமலிருக்கவும் சட்டம் செய்வது பற்றி சர்க்கார் யோசிப்பதாகத் தெரிகிறது.

சாகுபடி செய்யாமல் நிலத்தைத் தரிசாகப் போட்டிருந்தால் அந்த நிலத்தை கலெக்டர்கள் எடுத்துக்கொண்டு சாகுபடி செய்ய ஏற்பாடு செய்ய அதிகாரம் இருக்கிறது.

சாகுபடியில் உள்ள நிலத்தைப் புறக்கணித்து உற்பத்தி குறைவதற்கு இடமேற்பட சர்க்கார் விரும்பவில்லை என்றும், இதை உத்தேசித்தே சட்டம் செய்யலாமா என்று சர்க்கார் பரிசீலிப்பதாயும் கூறப்படுகிறது.

# 'பிரான்ஸ்' பாடம் கற்காத காமராசர் 'பம்பாயை'க் காட்டி மிரட்டுகிருர்!

# இருப்பது ஒரே உயிர்தான்— இயலுமானுல் எடுத்துக்கொள்ளட்டும்

## மமதை நிறைந்த பண்டித நேருவை மலை உச்சியிலிருந்து இறக்குவோம்

### அஞ்சி அஞ்சிப் பல நாள் சாவதைவிட அஞ்சாது ஒரே நாள் சாவோம்

## பிப். 20: அண்ணு போர் முழக்கம்

"தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சியினரிடத்திலும் பகையை வளர்த்துக்கொண்டு, பண்டித நேரு, யாரை நம்பிக்கொண்டு இந்த நாட்டில் உலவப் போகிருர்? யாரை நம்பிக்கொண்டு தனது அதிகாரத்தை நிலைநாட்டப்போகிருர்? காமராசரையும், கக்கனையும் நம்பிக்கொண்டா?"

—என்று அண்ணு அவர்கள் கேள்வி எழுப்பினுர்கள், கடந்த ஜன. 31-ந் தேதி சென்னை—வண்ணையம்பதியில் நடைபெற்ற கூட்டத்தில்!

"பிரிட்டிஷார் விட்டுப்போன பிரித்தாளும் சூழ்ச்சியை எத்தனை நாளைக்குத்தான் கையாண்டு வெற்றி பெற முடியும் பண்டித நேரு? ஓராண்டுக்குத் தமிழ்நாட்டில் அமைந்துள்ள கூட்டணி சிறப்பாகப் பணி புரியுமானுல் மலை உச்சியில் மமதையோடு உலவும் பண்டிதரைக் கீழே இறங்கி வந்து நியாயம் உணருமாறுச் செய்ய முடியும்"

—என்றும் அண்ணு அவர்கள் அக்கூட்டத்தில் இடிமுழக்கமிட்டார்கள்.

"'பம்பாயைப் பார்த்துமா புத்தி வரவில்லை?'—என்று பேசியிருக்கிருர், காமராசர்! 'பம்பாயைப் பார்த்து நாங்கள் பீதியடையவில்லை' என்று அவருக்கு நான் கூற விரும்புறேன்"

—என்றும் அண்ணு அவர்கள் பதிலுரைத்தார்கள்.

அண்ணு அவர்களின் சொற்பொழிவின் ஒரு பகுதி நேற்றைய இதழில் வெளிவந்திருக்கிறது. தொடர்ச்சி இங்கு தரப்படுகிறது:

"தமிழ்நாட்டிற்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்த்து நாம் மட்டும் பெரும் போராட்டங்களைத் துவக்கிஞல், 'இவர்களிடத்தில், படித்துப் பக்குவம் பெற்ற மாணவர்கள் இருக்கிருர்கள்; படித்துப் பக்குவம் பெற்றுக்கொண்டிருப்பவர்கள் இருக்கிருர்கள்; நடுத்தர மக்கள் உண்டு; ஆனுல், இவர்களிடத்தில் ஆலைத் தொழிலாளர்கள் உண்டா? விவசாயப் பெருங்குடி மக்கள் இருக்கிருர்களா?' என்று கேட்பார்கள்.

"தமிழரசுக் கழகம் போராட்டம் துவக்கிஞல், 'இவர்களிடத்தில், 'திராவிடர்' என்ற உணர்வை மறந்து, தமிழர் என்று எண்ணுகிறவர்கள்தானே இருக்கிருர்கள்?' என்று குறை கூறுவார்கள்.

"கம்யூனிஸ்டுகள் மட்டும் போராட்டத்தில் ஈடுபட்டால், 'இவர்களிடத்தில், பாடுபட்டு அலுத்துப் போன தொழிலாளர்கள் இருக்கிருர்கள்; பஞ்சடைந்த கண்ணேடு வாடிப்போயிருக்கும் விவசாயிகள் உண்டு; ஆனுல், இவர்களிடத்தில் 'பூகோளம்' தெரிந்தவர்கள் இல்லையே; வரலாறு கற்றவர்கள் கிடையாதே'—என்று குறைகூறுவார்கள்.

"இதேபோல, வேறெந்தக் கட்சிக்காரர்கள் துவக்கிஞலும், குறை சொல்லத்தான் செய்வார்கள்.

ஆனுல் இப்போது? எல்லாக் கட்சியினரும் ஒரே பட்டியில் அடைக்கப்பட்டிருக்கிருேம். நடைபெறும் போராட்டத்தில் கிடைக்கும் வெற்றி-தோல்விக்கு எல்லோரும் பொறுப்பாளியாவர்.

இத்தனை பெரிய அரிய அணிவகுப்பு இதுவரை தமிழ்நாட்டில் ஏற்பட்டதில்லை. அருமையான தலைவர்கள், அற்புதமான தளபதிகள் ஒன்று கூடியிருப்பது இது தான் முதல் முறை

"கடந்த பொதுத் தேர்தலின் போது திராவிடர் கழகம், கம்யூனிஸ்டுகளுடன் சேர்ந்து ஒரு கூட்டணி அமைத்தது; அப்போது, இதரர் எல்லாம் அந்த அணியில் ஒன்றுபடவில்லை—ஒன்றுபட முடியாது போயிற்று.

"ஆனுல் இப்போது, யார் யாருக்கு மக்கள் மன்றத்தில் செல்வாக்கு உண்டோ, எவர் எவர் மக்களுடன் நீங்காத் தொடர்பு கொண்டவர்களோ, எவருக்கெல்லாம் மக்களுக்குப் பணியாற்றும் வாய்ப்பும் வசதியும் பணியாற்றுவதற்குப் பற்றும், விருப்பமும் உண்டோ அவர்கள் எல்லாம் ஒன்றுபட்டிருக்கின்றனர்; கூட்டாகச் சேர்ந்து பணியாற்ற உறுதிபூண்டிருக்கின்றனர்.

"இந்தக் கூட்டணியில் சேர்ந்திருப்பதை ஒவ்வொருவரும் பெருமையாகக் கருதவேண்டும்; தங்கள் வாழ்வில் கிடைத்த பெரும் பேறெனக் கொள்ள வேண்டும்.

"இப்போதிருந்தே, இன்று முதலே, எல்லோரும், வரும் பிப்ரவரி 20-ந் தேதியன்று பொது வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெறுவதற்காக வேலை செய்யத் துவக்கிவிட வேண்டும்.

பிப்ரவரி 20-ந் தேதியன்று, எங்கும்—நாடு முழுதும் ஒரே அமைதியாக இருக்கவேண்டும் தொழிற்சாலைகள் திறந்திருக்கக் கூடாது. கடைகள் மூடிக் கிடக்க வேண்டும்; உணவு விடுதிகள் கூட மூடப்பட்டிருக்க வேண்டும்; போக்குவரத்து சாதனங்கள் ஸ்தம்பித்துக் கிடக்கவேண்டும்; இத்தனையும் துளியும் பலாத்காரமின்றி அமைதியாக நடைபெற வேண்டும்

"'தமிழரசுக் கழகம் இணைந்து பணியாற்றியதால்தான் வெற்றி கிடைத்தது,' என்று தி. மு. கழகத் தோழர்கள் கூறவும், 'தி மு. கழகம் சேர்ந்ததால்தான் வெற்றி முழுமை பெற்றது' என்று, தமிழரசுக் கழகத்தவர் கூறவும், 'கம்யூனிஸ்டுகள் கூட்டணியில் இடம் பெற்றதால்தான் வெற்றி பரிமளித்தது' என்று சோஷலிஸ்டுகள் கூறவும், 'சோஷலிஸ்டுகளால்தான் வெற்றி எழிலானதாயிருந்தது' என்று கம்யூனிஸ்டுகள் கூறவும்—இப்படி ஒருவரை ஒருவர் பாராட்டக்கூடிய வகையில், ஒருவருக்கொருவர் அன்புரை கூறத்தக்க வகையில் பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலை நிறுத்தத்தில் எல்லோரும் இணைந்து நின்று பணியாற்ற வேண்டும்.

"இப்போதே தி. மு. கழகத் தோழர்கள் அந்த வட்டத்தில் உள்ள தமிழரசுக் கழகத்தவருடன் கைகுலுக்கிக் கொள்ளவேண்டும்; பலம் பார்த்துக்கொள்ள அல்ல—அவரவர் பலம் அவரவர் அறிந்தது தான்—உள்ளன்போடு கைகுலுக்கிக்கொள்ள வேண்டும்.

தமிழரசுக் கழகத்தவர் போய், ஒரு கடைக்காரரிடம், 'பிப்ரவரி 20-ந் தேதி கடையடைக்க வேண்டும்' என்று கேட்டால், அப்போது கடைக்காரர், 'சற்று முன்புதான் தி. மு. கழகத் தோழர் சொன்னுர்,' என்று கூறவும், தி. மு. கழகத்தவர் போய் கூறும்போது, 'நேற்றே தமிழரசுக் கழகத்தவர் கூறினர்' என்றும், அல்லது 'இவர்கள் இருவருக்கும் முன்பாகவே கம்யூனிஸ்டு கூறினர்' என்றும் கூறத்தக்க நிலையில், தோழர்கள், நல்ல நோக்கத்தை—'தேவிகுளம்-பீர்மேடு தமிழருக்காக வேண்டும்'—என்ற நோக்கத்தைக் குறியாக வைத்து, ஒருவரை ஒருவர் போட்டி

(4-ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்க மதத் தலைவர்கள்

### ரஷ்ய மதத் தலைவர்களைச் சந்திப்பர்

ரஷ்யப் பெரும் புரட்சிக்கும் பின் முதன் முறையாக, விரிவான பிரதிநிதித்துவம் பெற்ற அமெரிக்க புராடெஸ்டென்ட் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் கோஷ்டி ஒன்று ரஷ்யாவில் உள்ள மதத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுவதற்காக, வரும் மார்ச் 9-ந் தேதியன்று மாஸ்கோ புறப்படுகிறதாம்.

## 'சுதந்திர நாளை துக்க நாளாகக் கொண்டாடுவீர்'

### இலங்கைவாழ் திராவிடருக்கு தி. மு. கழகம் வேண்டுகோள்

கொழும்பு, பிப். 1—

இலங்கையில் பூர்வீகமாக வாழ்ந்து வருபவர்களின் மொழிகளான சிங்களம், தமிழ் ஆகிய இரண்டு மொழிகளுக்கும் சமநிலை அளிக்க வேண்டும் என்று கோருவது நியாயமானது—நேர்மையானது என்று இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் கருதுகிறது.

சில சிங்கள மொழி வெறியர்கள் பிரிட்டிஷார் அளித்த சுதந்திரத்தைத் தங்களது சொந்த நலன்களுக்குப் பயன்படுத்த முயற்சிப்பதை இலங்கை தி. மு. கழகம் வன்மையாகக் கண்டிக்கிறது.

ஆட்சி மொழியாக சிங்களத்தைமட்டும் மேற்கொள்ளுவது என்றும், தமிழுக்கு சமநிலை அளிப்பதில்லை என்றும் ஆளும் கட்சியின் செயற்குழு முடிவு செய்திருப்பதை இலங்கை தி. மு. கழகம் கண்டிப்பதுடன், அந்த முடிவை நிராகரிக்கிறது.

ஆளும் கட்சியினரின் இந்தப் போக்கைக் கண்டிப்பதற்காக, இலங்கையின் சுதந்திர தினமான பிப். 4-ந் தேதியைத் துக்கநாளாகக் கொண்டாடுமாறு இலங்கையில் உள்ள திராவிடரை தி. மு. கழகம் கேட்டுக்கொள்கிறது. கழகத்தின் கிளை அலுவலகங்களில், கொடி, பாதி கம்பத்தில் பறக்கவிடப்பட வேண்டும் என்றும், கழகத் தோழர்கள் கழகச் சின்னமான கறுப்பு-சிவப்பு அல்லாது வேறு ஏதேனும் கறுப்புச் சின்னம் அணிந்துகொள்ள வேண்டும் என்றும், தோழர்கள் அனைவரும் சுதந்திரத் தின விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளாமலிருப்பதுடன், சினிமா-நாடகம் போன்ற கேளிக்கை நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளாமலிருக்க வேண்டும் என்றும் இலங்கை தி. மு. கழக செயலாளர் இரா. அ[illegible] வேண்டுகோள் விடுத்திருக்கிருர்.

## ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பதில் பதினைந்தாண்டுத் திட்டமாம்

### இராணுவச் செலவை அதிகரிக்க உத்தேசமாம்

### இந்தியப் பேரரசின் போக்கு

புதுடில்லி, ஜன. 30—

பாகிஸ்தானுக்கு அமெரிக்க இராணுவ உதவி அதிகரித்து வருவதின் விளைவாக, இந்தியா தனது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தை முழுவதுமாகத் திருத்தி அமைக்க உத்தேசிப்பதாகக் கூறப்படுகிறது.

அமெரிக்கா பாகிஸ்தானுக்கு அளித்துவரும் இராணுவ உதவி எவ்வளவு அதிகரித்திருக்கிறது என்பது தெரியாவிட்டாலும், அது இந்தியாவிற்குப் பெரும் கவலையைத் தந்திருக்கிறதாம்! பாகிஸ்தானிடம் உள்ள இராணுவ பலம் குறித்து இந்திய சர்க்காருக்குக் கிடைத்திருக்கும் தகவல்களின்படி பார்க்கும் போது, இந்தியாவின் தற்காப்பு வசதிகளை அதிகரித்துக்கொள்ள வேண்டுவது மிக அவசியமானது என்று தோன்றுகிறதாம்.

இதற்கிடையில், திட்டத்தின் உருவமே பெரியதொரு மாற்றத்திற்கு உள்ளாகும் என்று கூறப்படுகிறது.

ஐந்தாண்டுத் திட்டம்போய், பதினைந்தாண்டுத் திட்டம் வரலாம் என்று கூறப்படுகிறது.

## இந்தியத் துணிகளைப் பர்மா வாங்குமாம்!

இரங்கூன், ஜன. 31—

ரூ. 3 கோடி பெறுமான இந்தியத் துணியை வாங்குவதற்காக இரு பர்மிய மந்திரிகள் சீக்கிரமே இந்தியா வருவர் என்று தெரிய வருகிறது.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 3-2-'56 வெள்ளி


# பொதுக் குழுத் தீர்மானங்கள்

★

திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுக் குழு, சிதம்பரத்தில் கடந்த ஞாயிறன்று கூடி மேற்கொண்ட முடிவுகள் குறித்து ஏற்கனவே சில எழுதியிருந்தோம்.

கழகத்தின் பொதுக் குழுத் தீர்மானங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான விஷயத்திற்கு வழி காட்டுவதாக அமைந்திருக்கின்றன என்ருல் அது மிகையாகாது.

திராவிட மக்களின் நிரந்தரமான நல்வாழ்விற்கும், உண்மையான விடுதலைக்குமாகக் கழகம் மேற்கொண்டுள்ள நீண்ட கால வேலைத் திட்டங்களைத் திறம்பட செயல்படுத்துவதில் மட்டுமின்றி, இடையிடையே திராவிட மக்களுக்கு ஏற்படக்கூடிய இன்னல்களுக்கும், இடுக்கண்களுக்கும் மாற்றம் தேடுவதிலும், தற்காலிகமாக எழக்கூடிய சிக்கல்களுக்குப் பரிகாரம் காண்பதிலும், கழகம், தன் ஆற்றலைச் செலவிட்டு வருவதை நாட்டவர் நன்கு அறிவர். அந்த வகையில் அண்மையில் வீசிய புயலினுலும், பெருக்கெடுத்த வெள்ளத்தினுலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தேடித் தருவதில் கழகத் தோழர்கள் பெருவாரியாக—பெரும் அளவில் ஒத்துழைத்திருக்கின்றனர். அவர்களுக்கும், மற்றும் கலைஞர்கள், இதர அமைப்புகளிலீடுபட்டிருப்போர், பொது மக்கள் எல்லாம் நிவாரண வேலைகளுக்கு உதவியமைக்காக, கழகப் பொதுக் குழு பாராட்டு தெரிவித்திருக்கிறது.

பாராட்டுத் தெரிவிப்பதின் நோக்கமெல்லாம் கழகத் தோழர்களும், இதரரும், தாயகத்தின் ஒரு பகுதி மக்களுக்கு ஏற்படக்கூடிய இன்னலைத் துடைப்பதில் எல்லோரும் ஈடுபட வேண்டுமென ஊக்குவிப்பதற்காகத்தான்.

கழகத்தின் உறுப்பினர் சேர்க்கும் காலத்தை நீடித்துப் பொதுக் குழு செய்துள்ள தீர்மானத்தைப் பொதுவாக எல்லோருமே வரவேற்பார்கள். உறுப்பினர் சேர்க்கும் பணி எவ்வளவு முக்கியமானது—அவசரமானது என்பதைக் கழகத் தோழர்களுக்கு விளக்கியும், கழகத்தில் உறுப்பினராக வேண்டியது எப்படி மிகத் தேவையானது — அவசியமானது என்பதைத் திராவிட மக்களுக்கு எடுத்துக் காட்டியும் நாம் அண்மையில் இங்கு எழுதியிருந்தோம். நீடிக்கப்பட்டுள்ள கால வரம்பைப் பெரும் வாய்ப்பாகக் கருதித் தோழர்கள் தீவிரமாகப் பணியாற்ற வேண்டுமென்பதுடன், கழகத்தை நாளுக்குநாள் வளர்த்து வரும் திராவிட மக்களுக்கும் தங்களை உறுப்பினர்களாகப் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கூறுகிறோம்.

மாநில மாநாடு பற்றிய தீர்மானத்தைக் கண்டு கழகத் தோழர்களும், பொது மக்களும் மகிழ்வெய்தியிருப்பர்; தேதி நிர்ணயிக்கப்பட்டுவிட்டதல்லவா?

அடுத்து, மிக முக்கியமானதாய் அமைந்திருப்பது, கழகத்தின் மீது இதுகாறும கூறப்பட்டு வந்த குறை ஒன்றைப் போக்குவதாகும். கழகக் கொள்கைகளை விளக்கி, சிறு அளவிலேனும் அதிகாரபூர்வமான நூல் ஒன்று இல்லை என்பதே அக்குறை. அதனைப் போக்கும் வகையில், 'கொள்கை விளக்க நூல்' ஒன்றை வெளிக்கொண்டுவரும் பொறுப்பு தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. பலருக்கும் மகிழ்ச்சி தருவதாகும் இது.

மாணவர் பட்டாளம், 'இனி தி. மு. கழகத்தின் கிளையாகவே இயங்குவோம்' என்று தீர்மானித்திருந்ததைப் பொதுக் குழு ஏற்றுக் கொண்டிருக்கிறது. கழகத்தின்மீது மாணவர்கள் கொண்டிருக்கிற ஆர்வம் எவ்வளவு தீவிரமானது என்பதற்கு அவர்களது முடிவைவிட வேறு என்ன வேண்டும்?

தேசீய மயமாக்கப்பட்ட இன்ஷ்யூரன்ஸ் தொழில்பற்றிய கழக முடிவு, தொடர்புடைய சர்க்கார்களின் கவனத்திற்குரியதாகும்.

இலங்கைவாழ் திராவிடரின் நல்வாழ்வில் இயற்கையாகவே மிகுந்த அக்கரை கொண்டுள்ள தி. மு. கழகம், அவர்களது நலனுக்கு—எதிர்கால வாழ்விற்கு ஆபத்து தேடித் தரத் துடிக்கும் சிங்கள வெறியரின் போக்கிற்குக் கண்டனம் தெரிவித்திருப்பது ஆச்சரியத்திற்குரியதல்ல; இலங்கைத் தமிழர்களுக்குக் கழகம் ஆதரவு தர முன்வந்திருப்பது கடமையின்பாற்பட்டதாகும்.

'இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக ஆங்கிலமே இருக்க வேண்டும்' என்ற தமிழ்க் கலைக் கழகத்தார் கூட்டிய மாநாட்டின் முடிவைத் தி. மு. கழகம் ஏற்றுக்கொண்டிருக்கிறது; ஆதரித்திருக்கிறது. அந்தத் தீர்மானத்தை இந்தி வெறியர்களும், இந்தியப் பேரரசும் உற்று நோக்கிப் 'பயன்' பெறவேண்டும் என்று விரும்புகிறோம்.

## இலங்கையிலிருந்து வெளியேறிய இந்தியர்

கொழும்பு, பிப். 1—

இங்குள்ள இந்தியத் தூதுவராலுவலகக் கணக்குப்படி, 1954-செப்டம்பர் 11-ந் தேதி முதல் கடந்த ஆண்டு இறுதி வரை மொத்தம் 24,054 இந்தியர்கள் இலங்கையை விட்டு வெளியேறியிருக்கின்றார்களாம்.

இவர்களில் 15,783 பேர் தாங்களாகவே வெளியேறியவர் என்றும், வெளியேறுமாறு 'நோட்டீஸ்' பெற்று வெளியேறியவர் 8,271-பேர் என்றும் கூறப்படுகிறது.

---

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ், இதுவரை மொத்தம் 26 பெரிய பாலங்கள் கட்டப்பட்டிருக்கின்றன; மேலும் 31 பாலங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

# 'பொது வேலைநிறுத்தத்தில் நடிகர்களும் பங்கு பெறவேண்டும்'

## நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி வேண்டுகோள்

"திருவாங்கூர்-கொச்சி ஆந்திர மாநிலங்களில் பிணைக்கப்பட்டிருக்கும் தமிழ்ப் பகுதிகள் தமிழகத்துடன் இணைய வேண்டுமென்றும், 'தட்சிணப் பிரதேச அமைப்பு' என்றபெயரால் தென்னுட்டு மக்களின் உரிமையைப்பறிக்கத் திட்டமிடும் டெல்லி ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சியினையும் எதிர்த்துத் தமிழகத்தின் செல்வாக்குப் பெற்றுள்ள கட்சிகளும், அக்கட்சிகளின் தலைவர்களும் வெளியிட்டுள்ள வேண்டுகோளுக்கிணங்க 20-2-56 அன்று தமிழகமெங்கணும் நடைபெறவிருக்கும் பொது வேலை நிறுத்தத்தில், சினிமா—நாடகத் துறையில் சம்பந்தப்பட்டுள்ள எல்லா நடிகர்-நடிகைகளும், ஸ்டுடியோ உரிமையாளர்களும், தொழிலாளர்களும் பெரும் பங்கு கொண்டு கடமையாற்றுமாறு ஆவன செய்ய நடிகர் சங்கம் முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"தமிழர்—ஆந்திரர்—கன்னடியர்—கேரளத்தவர் ஆகிய நான்கு பகுதி மக்களும் மொழிவழி அடிப்படையில் தனித்தனி ஆட்சிபுரிந்தும், இனவழி அடிப்படையில் ஒன்றுபட்டும் இயங்கும் உயர் கொள்கையை உருவாக்கும்வகையில், தோழமை உள்ளத்துடன், ஆந்திர—கன்னட—மலையாள நடிகர்களும், 20-2-56 அன்று பொது வேலைநிறுத்தத்தில் கலந்துகொண்டு, நடிகர் சங்கத்தின் கடமை உணர்ச்சியை நிலைநாட்ட வேண்டுமாறு கோருகிறேன்"

என்று, நடிப்பு-இசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, அறிக்கை ஒன்று விடுத்துள்ளார்.

## உத்திரப் பிரதேச இளைஞர்தம் பொது அறிவு!

அடியில் ஓட்டை (துவாரம்) இல்லாததினுல்தான், இரும்புக் கப்பல் கடலில் மிதக்க முடிகிறது!

'அன்னியத் திட்டுகள்' என்ருல், வெளிநாட்டவர் 'பாக்கெட்'டுக்குச் செல்லும் பணம் என்று பொருள்!

'மாவ் மாவ்' என்ருல் ரஷ்யத் தலைவர் பெயர்.

'மாவ் மாவ்' சீன நாட்டுப் பிரதமர்!

'மாவ் மாவ்' பர்மியக் குடியரசுத் தலைவர்.

'மாவ் மாவ்' ஒரு யுத்தக் கைதி!

இப்படி எல்லாம் உத்திரப் பிரதேச பொதுப் பணித் தேர்வுக் குழுவினர் கடந்த 1954 டிசம்பர் திங்களில் நடத்திய பொதுப் பணித் தேர்வுக்கான பரீட்சை எழுதியவர்கள் குறிப்பிட்டிருந்தனராம்!

## அதற்கென்ன குறைச்சல்!

இந்தியாவில், இயந்திரக் கருவிகளை உற்பத்தி செய்வதற்காகத் தற்போதுள்ள உற்பத்தி சக்தியை புனர்பரிசிலனை செய்வதற்காகவும், நாட்டின் தேவைகளை மதிப்பிட்டறிவதற்காகவும், 10 உறுப்பினர் கொண்ட குழுவொன்றை இந்திய சர்க்கார் ஏற்படுத்தியுள்ளது.

## உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவில் தற்போது மொத்தம் 5,000 தந்தி நிலையங்கள் உள்ளன; இந்தியா சுதந்திரம் பெற்ற சமயத்தில் மொத்தம் 3,324 தந்தி நிலையங்களே இருந்தன. இவை தவிர, இரயில்வேக்களுக்காகவும், பல்வேறு பாசனத் திட்டப் பிரதேசங்களிலும், 4,000 தந்தி நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

பள்ளி செல்லும் வயதடைந்துள்ள குழந்தைகளில், உண்மையிலேயே பள்ளிக்கூடம் சென்று வருபவர்களின் விகிதாச்சாரம், இப்பொழுது சுமார் 50 சதவிகிதத்துக்கு உயர்ந்திருக்கிறது. இது 1947-ல் 30 சதவிகிதமாகவும், 1951-ல் 40 சதவிகிதமாகவும் இருந்தது.

இதர நாடுகளில் இரயில்வேக்களின் வேலை முறையில் ஏற்பட்டுள்ள புதிய முன்னேற்றங்கள் பற்றி அறிந்துகொள்வதற்காக இரயில்வே மந்திரி காரியாலயம், மூன்று உறுப்பினர்களைக் கொண்ட நிரந்தரக் குழு ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவிலேயே, உத்தரப் பிரதேசத்தில்தான் பவர் ஆல்கஹால் உற்பத்திசாலைகள் அதிகமாக உள்ளன. நாட்டில் உள்ள 19 உற்பத்திசாலைகளில், மொத்தம் 12 உற்பத்திசாலைகள் இப்பிரதேசத்திலே அமைக்கப்பட்டுள்ளன.

# இந்தியாவில் 'கலாச்சார ஒற்றுமை' நீண்டகாலமாக நிலைத்திருக்கிறதாம்

### குடியரசுத் தலைவர் கூற்று

திருவனந்தபுரம், பிப். 1—

"பல வெளிநாட்டுப் படையெடுப்புகளுக்குப் பின்னும், இந்தியாவின் கலாச்சார ஒற்றுமை பன்னெடுங்காலமாக காப்பாற்றப்பட்டு வந்திருக்கிறது; எனவே, காந்தியார் தோன்றி நம்மிடையே பணிபுரிந்து சுதந்திரமும், அரசியல் ஒற்றுமையும் பெற்றுத்தந்தது திடீர் நிகழ்ச்சியல்ல.

"பிரிட்டிஷ் ஆதிக்கம் நீங்கி சுதந்திரம் பெற்ற பின்பு இந்தியா, பல்வேறு நாடுகளாகப் பிரிந்துவிடும் என்று நம்முடனில்லாதவர்கள் எண்ணினுர்கள்.

"ஆனுல், ஆண்டவன் அருளாலு(!) சர்தார் பட்டேலின் 'தீர்க்கதரிசனம்,' இராஜதந்திரம் இவற்ருலும், சமஸ்தானுதிபதிகளின் நல்லெண்ணத்தாலும், நாட்டுப் பற்ருலும் எப்போதுமில்லாதவகையில் இந்தியா ஒரே நாடாக இணைக்கப்பட்டது. இப்போதிருக்கிற சர்க்காரைப் போல் வேறெப்போதிருந்த சர்க்காரும் இந்தியா முழுவதையும் ஒரே குடையின் கீழ் ஆட்சி செலுத்தியதில்லை"

என்று குடியரசுத் தலைவர் டாக்டர் இராசேந்திர பிரசாத் திருவனந்தபுரம் நகரசபையினர் தமக்களித்த வரவேற்புக்கு பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிருர்.

மேலும் அவர் பேசுகையில், 'இந்தியா முழுமைக்குமான நலன்களுக்காக வகுப்பு, சாதி, மாகாண தாயகப் பித்துக்களை மட்டம்தட்டுகிற 'ஏக இந்தியா' என்ற ஒற்றுமை உணர்வையும், நாட்டுப் பற்றையும் வளர்த்துக் கொண்டாலன்றி, நாம் பெற்றுள்ள சுதந்திரத்தை இழந்துவிடுவோம்; நமது ஜனநாயகம் அற்ப ஆயுளானதாகிவிடும்,' என்றும் குறிப்பிட்டாராம்!

## தென்னுப்பிரிக்க சர்க்காரின் வெறிக்குணம்!

கேப்டவுன், பிப். 1—

ரஷ்யாவுடன் அரசியல் தூதுவர் உறவைத் துண்டித்துக்கொள்ள தென் ஆப்பிரிக்கா தீர்மானித்துவிட்டதாம்.

இதுவரை இரு நாடுகளுக்கு மிடையே 'ஸ்தானீக உறவு' மட்டுமே. இருந்துவந்தது; அதுவும் இப்போது துண்டிக்கப்பட்டுவிடுகிறது.

கடந்த உலகப் போரின்போது இருநாடுகளும் நேசநாடுகளாயிருந்தன; அப்போதுதான், தென்னுப்பிரிக்காவுடன் 'ஸ்தானீக' உறவை ரஷ்யா ஏற்படுத்திக்கொண்டது.

மதுபானச் சட்ட விதிகள் ரஷ்யத் தூதுவராலுவலகத்தில் கடைப்பிடிக்கப்படவில்லை என்றும், எச்சரிக்கையையும் பொருட்படுத்தாது மதுபானச் சட்டம் மீறப்பட்டது என்றும் தென்னுப்பிரிக்க சர்க்கார் தனது குறிப்பில் குற்றம் சாட்டியிருக்கிறது.

தென் ஆப்பிரிக்கச் சட்டம் வெள்ளையரல்லாதாருக்கு மது வழங்கக்கூடாதெனத் தடை விதிக்கிறது.

# பூரி இரயில் நிலையம் புதுப்பிக்கப்படாதாம்

## இந்தப் போக்கு மக்களுக்கு புத்திபுகட்டவாம்!

அண்மையில் தாக்கப்பட்டு எரித்துச் சாம்பலாக்கப்பட்ட பூரி இரயில் நிலையம், இன்னும் சில நாளைக்குத் திரும்பவும் புதுப்பிக்கப்படாமல் இப்போதிருப்பதுபோலவே வைத்திருக்க சர்க்கார் எண்ணுகிருர்களாம்!

பொதுச் சொத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மக்களைத்தான் பாதிக்கும் என்பதை அந்த வட்டார மக்கள் உணர்ந்து கொள்வதற்காகத் தானும் இந்த ஏற்பாடு!

அண்மையில், மாநிலப் புது அமைப்பை ஒட்டி ஏற்பட்ட கொந்தளிப்பின்போது, ஆத்திரம் கொண்ட மக்களின் தாக்குதலுக்கு இலக்கானவை பெரும்பாலும் ரயில் நிலையங்களாகவே இருந்தன என்றும், இரயில்வேச் சொத்துக்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கும் அப்பால் பாதைகள் சீர்குலைவினுல் போக்கு-வரத்துத் தடைப்பட்டபோது வேறு நஷ்டம் ஏற்பட்டதென்றும் கூறப்பட்டுள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகள் சிலவற்றிலிருந்து கிடைக்கும் தகவல்களின்படி சுமார் ஒரு கோடி ரூபாய் பொருள்வரை நஷ்டமாகியிருக்கலாம் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறதாம்.

தங்கள் அதிருப்தியைத் தெரிவிப்பதற்கு இரயில் நிலையங்களைக் குறிவைக்கும் ஆர்ப்பாட்டக்காரர் மீது நடவடிக்கை எடுக்க இரயில்வே இலாகாவினர் யோசித்து வருகின்றனராம்.

## உங்கள் குறிப்புக்கு!

தபால்-தந்தி இலாகாவின் மூலதனச் சொத்துக்களின் மொத்த மதிப்பு இந்தியா பிரிவினையாவதற்கு முன்பு ரூ. 33 கோடியாக இருந்தது—முதலாவது ஐந்தாண்டுத் திட்டக் கால ஆரம்பத்தில் ரூ. 50 கோடியாக உயர்ந்துவிட்டது; திட்ட கால இறுதிக்குள்ளாக அது ரூ. 92 கோடியாக உயர்ந்துவிடுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது!

# நேருவின் அக்கிரமத் தீர்ப்பு

## தமிழகமெங்கணும் கண்டனம்

தேவிகுளம், பீர்மேடு தமிழர்களுக்கு இல்லை—என்ற நேரு பண்டிதரின் அநியாயத் தீர்ப்பை எதிர்த்துத் தமிழகமெங்கணும் கண்டனக் குரல் கிளம்பியுள்ளது. ஆங்காங்கே கண்டன ஊர்வலங்கள், கூட்டங்கள், வேலைநிறுத்தங்கள் நடைபெற்றுள்ள விபரங்களைச் சுருக்கிக் கீழே தருகிறோம் :—

### குன்னத்தூர்

22—1—56ல் இவ்வூரில், தி.மு. கழகம், தமிழரசுக் கழகம் ஆகிய கட்சியினர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, கடையடைப்பு செய்யப்பட்டது. அன்று காலையில் நகரின் முக்கியத் தெருக்கள் வழியாக ஊர்வலமும், மாலையில் திரு. கே. ஆர். ஆனந்தன் தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. பல கட்சித் தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.

### மூணர்

23—1—56 மாலை 7 மணிக்கு இங்கு, தி மு. கழகச் சார்பில் தோழர் ஜே. டேவிட் தலைமையில் நடைபெற்ற கண்டனப் பொதுக் கூட்டத்தில், தோழர் சோமு நேருவின் எதேச்சாதிகாரத் தீர்ப்பைக் கண்டித்துச் சொற்பொழிவாற்றினர். பின்னர், தேவிகுளம், பீர்மேடு தாலுகா போராட்டம் சம்பந்தமாகத் தி. த. நா. கா.-வுடன் கலந்து ஆலோசனை செய்வதற்கென தோழர்கள் எம். பி ஜான், சோ. இராமலிங்கம், ஜே. டேவிட் ஆகியோரை முறையே செயலாளர் துணைச்செயலாளர், மத்தியக் குழு உறுப்பினராகக் கொண்ட குழு ஒன்றை நியமித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. போராட்டத்திற்கு வேண்டிய ஆக்க வேலைகளை முன்னின்று செய்வதாக ஒவ்வொரு தோட்டங்களிலுமுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும் இசைந்துள்ளார்கள்.

### இராசீபுரம்

23—1—56ல் இங்குள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டன மாலை 5 மணிக்கு,நாமக்கல்ரோட்டிலிருக்கும் முனிசிபல் சத்திரத்திலிருந்து ஓர் சர்வ கட்சியினரும் அடங்கிய ஊர்வலம் புறப்பட்டு பல தெருக்கள் வழியாகச் சென்று புதுசந்தைப்பேட்டையை அடைந்தது. அங்கு தோழர் எஸ் இராமசாமி தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் என். திருமலைசாமி (தி. க.) எ. எம். சுப்பிரமணியம் (கம்.) எ. கோவிந்தசாமி, (தி. மு. க.) நடராஜன் (த. க.) இ ஆர். கிருஷ்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

### திருப்பூர்

23—1—56-ல் இவ்வூர் வள்ளுவர் படிப்பக உறுப்பினர் கூட்டம், தோழர் கணேஷ் தலைமையில் நடைபெற்றது அக்கூட்டத்தில் நேருவின் எதேச்சாதிகாரப் தீர்ப்பைக் கண்டித்தும், மாநில அமைச்சர்களை இராஜினாமாச் செய்யக் கேட்டுக்கொண்டும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன.

### உடுமலை

24—1—56-ல், 2000-க்கு மேற்பட்ட மாணவர்கள் உடுமலை நகர சட்ட மன்ற உறுப்பினர்களை இராஜினாமாச் செய்யக் கோரி ஊர்வலம் வந்தனர். நகரில் உள்ள கடைகள், ஓட்டல்கள் அத்தனையும் அடைக்கப்பட்டிருந்தன.

### திருக்கோவிலூர்

24—1—56 காலை, இவ்வூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலை ஆண்பள்ளி மாணவர்கள் பள்ளிக்குப் போகாமல் வேலை நிறுத்தம் செய்து ஊர்வலமாகச் சென்றனர்.

அரகண்ட நல்லூரிலிருந்து சர்வ கட்சியினர் (தி. மு. கழகம், திராவிட கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி) அடங்கிய ஊர்வலம் புறப்பட்டு கீழையூர், திருக்கோவிலூர் வழியாக சந்தைப் பேட்டைக்குச் சென்று, அங்கு மாணவர் ஊர்வலத்துடன் கலந்து மாபெரும் ஊர்வலமாகச் சென்றனர்.

உயர்நிலைப்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற கூட்டத்தில், தோழர்கள் எ. ஹகீம் (தி. க.), டி. வி. வெங்கடேசுவரன் (கம்.) ஆகியோர் பேசினர். கண்டனத் தீர்மானம் நிறைவேறியது.

அன்று மாலை அரகண்டநல்லூர் வள்ளுவர் திடலில், தி. கழகம், தி. மு. கழகம், கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷலிஸ்டுக் கட்சி ஆகிய சர்வ கட்சியினர் சார்பில் தோழர் எ. ஹகீம், (தி. க.) தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் கதிரவன் (தி. மு. க.), டி. வி. வெங்கடேசுவரன், (கம்), ஆர். தெய்வசிகாமணி (கம்.), எ. என். சுந்தரம், எஸ். என். சண்முகானந்தம் (சோஷ) ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

### மேலூர்

25—1—56-ல், இவ்வூர் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 300 பேரும், மற்றும், சுந்தரேச வித்தியாசாலை, சி. எஸ். ஐ பள்ளி மாணவ மாணவிகளும் திரண்டு கண்டன. ஊர்வலம் நடத்தினர். கடைகள் அனைத்தும் அடைக்கப்பட்டன. ஊர்வலம் மந்தை மைதானத்தை அடைந்ததும், அங்கு நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### திருமங்கலம்

25—1—56ல், நகரில், நகர தி. மு. கழகம், பி. சோ., கம்யூனிஸ்டுக் கட்சி, ஆகிய சர்வ கட்சிகளின் சார்பில் பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றது. பள்ளிகள், கடைகள், சிற்றுண்டிச்சாலைகள் அனைத்தும் மூடப்பட்டன மாலை 5 மணிக்கு நகரின் முக்கியத் தெருக்கள் வழியாகக் கண்டன ஊர்வலம் நடைபெற்று, குமரன் கோயில் முன்வந்ததும், தோழர் மா. தெய்வசுப்பிரமணியன் தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. சர்வ கட்சியையும் சேர்ந்த தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர்.

### கடம்பூர்

25—1—56-ல், தி. மு. கழகச் சார்பில், கண்டன ஊர்வலம் நடைபெற்றது. வர்த்தக நிலையம், கல்வி நிலையம், கைத்தறி—தீப்பெட்டித் தொழில் நிலையங்களும் மூடப்பட்டன. காலை 10-30 மணிக்கு கழகப் பணிமனையிலிருந்து தோழர் சி. இராமசாமி தலைமையில் ஊர்வலம் புறப்பட்டு, கண்டன ஒலி முழக்கங்களுடன் வீதிகள்தோறும் சென்று, பின்னர் கழகப் பணிமனை அடைந்ததும், தோழர் ஆ. அருணசலம் கொண்டுவந்த கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்றியதும், ஊர்வலம் கலைந்தது.

### செங்கற்பட்டு

26—1—56ல், இவ்வூரில், தி.க., தி. மு. க. ஆகிய இரு கட்சியினரும் ஒன்றுதிரண்டு கடைகள், சினிமாக் கொட்டகைகள், உணவு விடுதிகள் அனைத்தும் அடைக்கச் செய்தனர். காலை 8 மணிக்கு மேலமையூரிலிருந்து, தோழர் சி. ஆர் நரசிம்மன் தலைமையில் மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, முக்கிய வீதிகள் வழியாக, கண்டனக் குரல் எழுப்பிக்கொண்டு சென்று, மணிக்கூண்டு வந்தடைந்தது. ஊர்வலத்தில் தோழர்கள் து. கோவிந்தராசன், மு. இரங்கநாதன், சி. ஆர். செயராமன், கெங்காதரன், (தி.க.)ஜே எ. வகாப், எ பலராமன், சி. பி. வேணு, செ. த. செயராமன், எஸ். வெங்கடேசன், உலகநாதன், சி. என். பொன்னுசாமி, இராதா, இராசு (தி. மு. க.) மற்றும் ஏராளமான பொதுமக்களும் கலந்துகொண்டனர். மாலை 6 மணிக்கு நரசிம்மன் தலைமையில் தர்க்கா திடலில் பொதுக்கூட்டம் நடந்தது. தோழர்கள் து. கோவிந்தராசன், மு. இரங்கநாதன், ஜே. ஏ. வகாப், வாகீத், தனசேகரன், பாண்டியன் ஆகியோர் பேசியபின், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

*************************************

## பொதுக் குழு முடிவுப்படி

### தி. மு. கழக உறுப்பினர் சேர்க்கும் காலம்

# 29—2—56

### வரை நீடிக்கப்படுகிறது

★

கழகம் வலிவும் பொலிவும் பெறக் கழகச் செயலாளர்கள் உறுப்பினர் பதியும் பணியைத் தீவிரமாக்குவார்களாக!

★

### தலைமை நிலையத்தில்

பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் உரிமைச் சீட்டுகள் பிப்ரவரி 15-ஆம் நாளுக்குமேல் கிளைக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்பெறும்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

*************************************

## காணவில்லை

"திருச்சி குளித்தலை வட்டத்தைச் சேர்ந்த கவண்டம்பட்டி தி. மு. கழகச் செயலாளரும், கவண்டம்பட்டி விவசாய சங்கச் செயலாளருமான தோழர் சு முத்து அவர்கள் சுமார் 10 தினங்களாகக் காணப்படவில்லை. சொல்லாமல் எங்கும் போகமாட்டார். ஆகவே எதிரிகளால் அவருடைய உயிருக்கு அபாயம் ஏற்பட்டிருக்குமோ என்று அஞ்சுகிறேன்.

"எனவே திருச்சி மாவட்ட தி மு. கழகத் தோழர்கள் அவர் பற்றிய தகவல் கிடைத்தால் உடன் எனக்கு அறிவிக்குமாறு வேண்டுகிறேன்,"

என்று, திருச்சி எம். எஸ். மணி அவர்கள் அறிவிக்கிறார்.

## தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்கட்கு

"12—2—56 காலை 10 மணியளவில், திருவாரூர்—விஜயபுரம் நூர்தீன் பில்டிங்கில், தஞ்சை மாவட்ட தி. மு. கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். மாவட்டத்தில் பொது உறுப்பினர் சேர்த்தல், பிப்ரவரி 20ல் பொதுவேலை நிறுத்தம் பற்றி ஆராய்தல் முதலியன ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்,"

என்று தஞ்சை மாவட்டத் தி. மு. கழகச் செயலாளர் தோழர் என். எஸ். இளங்கோ அறிவிக்கிறார்.

### சிவகாசி

26—1—56-ல், சிவகாசி நகரில் நகர தி. மு. கழகம், ம. சோ, கம்யூனிஸ்டுக் கட்சிகளின் சார்பாக, முழு கடையடைப்புச் செய்யப்பட்டது. அன்று மாலை 5 மணிக்கு தோழர் ஏ. சுப்பையா (தி. மு. க.) தலைமையில் மாரியம்மன் கோயில் முன்பு இருந்து மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு, கண்டன ஒலி முழக்கங்களுடன் முக்கிய வீதிகளின் வழியாகச் சென்று. ஊர்வலம் ஆரம்பித்த இடத்தை வந்தடைந்தது. அவ்விடத்தில் இரவு 7 மணிக்கு நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில், நகர தி. மு. கழகச் செயலாளர் தோழர் பி. சுப்பையா (நகரசபை உறுப்பினர்) தலைமையில் தோழர்கள் வே. கருணாகரன் (தி.மு க.), சி. வீ. எம். அண்ணாமலை (தி. மு. க.), துரைச்சாமி (கம்.), வே. கருப்பையா (ம. சோ.) ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில், கண்டனத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன.

### ராசப்பய்யன்சாவடி

26—1—56-ல், நகரில் கடை அடைப்பு, வேலை நிறுத்தம் ஊர்வலம், மாலை பொதுக்கூட்டம் போன்ற நிகழ்ச்சிகள் சர்வ கட்சிச் சார்பில் நடைபெற்றன. திரு. மா. சண்முகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றக் கண்டனப்பொதுக் கூட்டத்தில் தோழர்கள் ராமானுஜம் (த. அ.க), பி. எஸ். சாமி, சி. எஸ். வேலன் (தி. மு. க.), ரெங்கராசு (தி க.), என். வீ. சுந்தரம் (தா வி ச.) ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் கண்டனத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கொண்டயம்பட்டி

26—1—56 மாலை 5-30 - மணிக்கு, தி. மு. கழகச் சார்பில் ஊர்வலமும், மாலை 6½ மணிக்கு, கடைவீதியில், தோழர் ந. பெ. பழனிச்சாமி தலைமையில் கண்டனப் பொதுக்கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் சோ. வெள்ளைச்சாமி, சு. பெ. ரா. மலைச்சாமி, சி. பாலுச்சாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். கூட்ட இறுதியில் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

### கவுந்தப்பாடி

27—1—56 மாலை 5 மணிக்கு, கவுந்தப்பாடி தி. மு. கழகத்தின் சார்பில், பெரியார் மைதானத்திலிருந்து கழகக் கொடிகளுடன், கண்டன ஒலி முழக்கங்களுடன் மாபெரும் ஊர்வலம் கிளம்பிற்று. முக்கியத் தெருக்களில் ஊர்வலம் சென்று மைதானத்தை அடைந்ததும், கிளைக் கழகச் செயலாளர் அனைவருக்கும் நன்றிகூறி ஊர்வலம் கலைந்தது. ஒலிபெருக்கி அனுமதி கிடைக்காததால் பொதுக் கூட்டம் நடைபெற முடியவில்லை.

### சாத்தூர்

27—1—56-ல், சாத்தூர் எட்வர்டு உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் ஒன்று திரண்டு, நேருவின் தீர்ப்பைக் கண்டிக்கும் ஒலி முழக்கங்களை எழுப்பிக்கொண்டு ஊர்வலமாகச் சென்றனர். ஊர்வலத்தைக் கழகப் பற்றுடையோர் தலைமை தாங்கி நடத்தினர் எனத் தெரிகிறது.

### தி. மு. கழக 2-வது மாநில மாநாடு அலுவலகம்

திருச்சியில் 'மே திங்களில் நடைபெறும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டிற்கென 1—2—56 முதல் தனியாக அலுவலகம் திறக்கப்பட்டிருக்கிறது.

மாநாடு சம்பந்தமாகக் கடிதம் எழுதும் தோழர்கள் இனி கீழ்க்கண்ட முகவரிக்குக் கடிதம் எழுத வேண்டுமென அறிவிக்கப்படுகிறது.

அலுவலக நேரம்:

காலை 9—1; மாலை 3—7

செயலாளர்

தி. மு. கழக 2-வது மாநில மாநாடு

நெ. 9, கிலேதார் தெரு,

தெப்பக்குளம்—திருச்சி.

### புதுக்கோட்டை

29—1—56 மாலை 4 மணியளவில், சர்வகட்சியினரின் ஊர்வலம் ஒன்று நகர் மணிக்கூண்டிலிருந்து புறப்பட்டு நகரின் முக்கிய வீதிகளின் வழியே, எதிர்ப்பு ஒலியை எழுப்பிக்கொண்டு சென்றது. ஊர்வலத்தில் தி. மு. க., தி. க., கம்யூனிஸ்டுக் கட்சியினர் முக்கியமாகக் கலந்துகொண்டனர்.

மாலை 6-30 மணிக்கு ஊர்வலம் காந்தி சதுக்கம் வந்தடைந்ததும் கண்டனப் பொதுக் கூட்டத்தில் ஒலிபெருக்கி அனுமதி மறுக்கப்பட்டதால் ஒலி பெருக்கி இல்லாமலேயே நடைபெற்றது. தோழர்கள் க. ஞானமுத்து, கிருட்டினன், பொன்னுசாமி (தி. மு. க.) மற்றும் பல கட்சித் தோழர்களும் சொற்பொழிவாற்றினர்.

### வத்தலக்குண்டு

30—1—56ல், இவ்வூர் தி. மு. கழகம், பி. சோ. கட்சிகள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்கி, ஊரிலுள்ள கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. அன்று மாலை, மேற்படி இரு கட்சிகளின் சார்பில், நகரின் முக்கிய வீதிகள் வழியாகக் கண்டன ஊர்வலம் நடைபெற்று, பின்னர் இரவு 7 மணிக்கு ரேடியோ மைதானத்தில், தோழர் பி. முத்தையா (பி. சோ.) தலைமையில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

### தாத்தையங்கார்பேட்டை

31—1—56 காலை 10½ மணியளவில், இவ்வூர் உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகள் பள்ளிக்குச் செல்லாது அனைவரும் ஒன்று திரண்டு கண்டன ஒலி முழக்கங்களுடன் முக்கியத் தெருக்கள் வழியாக ஊர்வலம் வந்தனர். ஊர்வலம் பள்ளியை அடைந்ததும் மாணவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றனர். சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்றத் தமிழ் உறுப்பினர்கள் அனைவரும் இராஜினாமாச் செய்யவேண்டுமென்று கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

## வெளி நாடுகளில் தமிழ்நாட்டுக் கரும்பு ரகங்கள்

கோயமுத்தூர் கரும்பு வளர்ப்புப் பண்ணையில் தயாரிக்கப்பட்ட புதிய கரும்பு ரகங்கள் இந்தியாவில் கரும்பு சாகுபடி செய்யப்படும் நிலப்பரப்பில் 95 சதவிகிதத்துக்கு அதிகமான பிரதேசத்தில் பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் சில ரகங்கள் தென்னாப்பிரிக்கா, ஆஸ்திரேலியா, பிஜியா, பிரிட்டிஷ் கயானா, ஜமெய்க்கா ஆகிய நாடுகளிலும் பயிர் [illegible] வருகின்றன.

# அண்ணா போர் முழக்கம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போட்டுக்கொண்டு வேலை செய்ய வேண்டும்.

"'இப்படியெல்லாம் பொது வேலை நிறுத்தம் வெற்றிகரமாக நடைபெற்றால், தேவிகுளம்—பீர்மேடு கிடைத்துவிடுமா?'—என்று கேட்கக்கூடும் சிலர்; எதைத்தான் கேட்காமலிருக்கிறார்கள், இந்த நாட்டில்? மந்திரி சுப்பிரமணியம் கூடக் கேட்டார்—'நான் பதவியிலிருந்து விலகுவதினால், தேவிகுளம்-பீர்மேடு கிடைக்குமா?'—என்று! மந்திரி சுப்பிரமணியம் விலகிவிடுவதினால் தேவிகுளம்—பீர்மேடு கிடைக்கும் என்பதல்ல; அவர் தொலைவாரல்லவா? அதனால் நாட்டிற்கு எவ்வளவு நன்மை?

"'தேவிகுளம்—பீர்மேடு வட்டங்களை விடமாட்டார்கள் தமிழர்கள்' என்பதை, டெல்லி சர்க்கார் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதற்குத்தான் பொது வேலைநிறுத்தம்.

"எல்லாக் கட்சியினரும் ஒன்றுகச் சேர்ந்து கட்டுப்பாட்டுடன் காரியமாற்றினால் தேவிகுளம்--பீர்மேடு தமிழகத்துடன் சேர வேண்டும் என்பதில் வெற்றி பெறுவோம் என்று கூறிக்கொள்கிறேன்.

இந்த நாட்டில் எல்லாக் கட்சியினரையும் பகைத்துக்கொண்டு, யாரை நம்பி இந்த நாட்டை ஆளப்போகிறார் பண்டித நேரு. எவரை நம்பி இந்த நாட்டில் உலவுவார்? எப்படி தனது அதிகாரத்தை நிலைநாட்டுவார்? காமராசரையும், கக்கனையும் நம்பிக்கொண்டா? காமராசர்—முதன் மந்திரி; கக்கன்—தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் என்று சிலர் கூறலாம். ஆனால் அவர்கள், அந்தப் பதவிகளுக்கு வருவதற்கு முன்பும் நமக்குத் தெரியும்—இப்போதும் தெரியும். இந்தப் பதவிகளிலிருந்து போன பின்பு என்ன ஆவார்கள்—எப்படி இருப்பார்கள் என்பதும் நமக்குத் தெரியும்.

"ஓராண்டுக் காலத்திற்கு இந்தக் கூட்டணி, சிறப்பாக வேலை செய்யுமானால், மலை உச்சியில் உலவும் மமதை நிறைந்த பண்டித நேருவைக் கீழே இறங்கிவரச் செய்ய முடியும்.

"காமராசர் செங்கம் எனும் இடத்தில் கூறினாராம்—சில எதிர்க்கட்சிகள் எல்லாம் கூடி, பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்திருக்கின்றனராம்; இவர்களுக்கு பம்பாயைப் பார்த்துமா புத்தி வரவில்லை?"—என்று!

"அவருக்கு நான் சொல்கிறேன் 'பம்பாயைப் பார்த்து நாங்கள் பீதி கொள்ளவில்லை'—என்று!

"பம்பாயைப் பார்த்தும் புத்தி வரவில்லை என்று கேட்டால், என்ன பொருள் அதற்கு? எண்ணிப் பார்த்தார்களா?—திராவிடர் கழகத் தோழர்கள்?

"பம்பாயில் கிளர்ந்தெழுந்த மக்களைப் போலீசார் சுட்டு வீழ்த்தினார்கள்; பலர் கொல்லப்பட்டனர்; நூற்றுக்கணக்கானோர் படுகாயப்பட்டனர், எண்ணற்றோர் சிறைப்பிடிக்கப்பட்டனர்; கொடுமைக்கு ஆளாக்கப்பட்டனர். அதைத்தானே இங்கேயும் செய்யப்போவதாக காமராசர் கூறுகிறார்?

"'இருப்பது ஒரு உயிர்தான்; வேண்டுமானால் — தைரியமிருந்தால் எடுத்துக் கொள்ளட்டும்,'—அதைத்தான் சொல்ல விரும்புகிறோம், நாம்!

"பம்பாயைப் போல இங்கு ஆர்ப்பாட்டங்கள் நடைபெறாது; அமைதியாகவே கிளர்ச்சி நடைபெறும்; என்றாலும், காமராசர் பம்பாய் போல துப்பாக்கித் துரைத்தனம் செய்ய நினைத்தால் செய்யட்டும். தமிழர் ஒருவரை முதன் மந்திரியாகக் கொண்ட ஆட்சியில், தமிழர் தம் உரிமைக்காகப் போராடியவர்கள் நூறு பேர் வரை சுட்டுக் கொல்லப்பட்டார்கள் என்று இரத்தக் கறை படிந்த வரலாறு எழுதப் பட்டும்; யாருக்குக் கேவலம் அது?

"அஞ்சி அஞ்சி, அடிமைப் பட்டு பலநாள் சாவதைவிட, அஞ்சாமல் — அடிமைப்படாமல்—ஒரே நாளில் சாவது மேலல்லவா?

"பம்பாயைப் பார்த்துமா புத்தி வரவில்லை—என்று நம்மைக் கேட்கும் காமராசரை, 'பிரான்சைப் பார்த்த பின்புமா இப்படிப் பேசுகிறீர்?' என்று நமக்குக் கேட்கத் தோன்றவில்லை; ஏனெனில், காமராசருக்கு அந்த வரலாறு தெரியாது?"

# காஞ்சியில் பொதுச்செயலாளர்

தேவிகுளம்—பீர்மேடு பற்றி தி. மு. கழக விளக்கம்

12—2—56 ஞாயிறு அன்று மாலை காஞ்சியில் தி. மு. கழகச் சார்பில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் விளக்கிப் பேசுவர்.

# தமிழ் வளர்ச்சி மன்றம் திறப்பு விழா

6—2—56 திங்கள் மாலை 5 மணிக்கு தொண்டையார் பேட்டை புதுமனைக் குப்பத்தில், ('அறிவகம்' அருகில்) தோழர் எம். எஸ். பாண்டியன் தலைமையில் தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், காஞ்சி—கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

# மூன்று மணி நேரம் பேசினராம்; முடிவேதும் இல்லையாம்!

பெங்களூர், பிப். 2—

'தட்சிணப் பிரதேசம்' என்ற உதவாத திட்டம் குறித்து—உருப்படாத யோசனை குறித்து மைசூர், திரு-கொச்சி, சென்னை ஆகிய மூன்று மாநிலங்களுடைய முதன் மந்திரிகளுடனும் இந்தியப் பிரதமர் மூன்று மணி நேரம்வரை பேசினாராம்.

முடிவேதும் ஏற்படவில்லை என்று கூறப்படுகிறது.

தொடர்ந்து பேச்சுவார்த்தை நடைபெறுமாம்.

திரு-கொச்சி, மைசூர் முதன் மந்திரிகள், காமராசரை சுலபத்தில் 'ஏமாற்றி', திட்டத்திற்குச் சம்மதம் பெற்று வருவதற்காகத்தான் பண்டிதரின் 'துணை'யை நாடினராம்—அவருக்குக் காமராசரிடத்திலிருக்கிற 'செல்வாக்கு' காரியத்தை சுலபத்தில் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையில்!

காமராசருடன், பக்தவத்சலம், சுப்பிரமணியம் முதலானோரும்' சென்றனர்!

## பெரியார் எதிர்ப்பு

பெங்களூர் சென்றுள்ள காமராசர் நேருவிடம் பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில், 'தட்சிணப் பிரதேசம் கூடாது' என்று கூறி, பெரியார் தந்தி அனுப்பியுள்ளார்,

காமராசர், பெரியாரின் 'ஆசி' பெற்றவர் என்பதை மைசூர், திரு-கொச்சி முதன் மந்திரிகளும்—ஏன், பண்டிதர்கூட அறிந்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

## கேரளத்தில் எதிர்ப்பு!

கோழிக்கோடு, பிப். 2—

மலபார் மாவட்ட ஆட்சி மன்றம் இன்றையக் கூட்டத்தில், 'தட்சிணப் பிரதேசத்' திட்டத்தை எதிர்த்து பெருவாரியான வாக்குகளால் தீர்மானம் ஒன்று நிறைவேற்றியிருக்கிறது.

'கேரள மாநில அமைப்பிற்கு வேட்டு வைக்கும் இந்த முயற்சியை கேரளர் ஆதரிக்கக்கூடாது' எனப் பேசப்பட்டிருக்கிறது—அங்கு!

# படகு கவிழ்ந்து 12 பேர் பலி!

கர்னூல், பிப். 2—

கடந்த கிழமை இங்கிருந்து 35 மைல் தொலைவில் உள்ள சித்தேசுவரம் எனும் இடத்தில் கிருஷ்ணாநதியில் படகு ஒன்று கவிழ்ந்ததின் விளைவாக ஆறு பெண்கள், மூன்று குழந்தைகள் உட்பட பன்னிரண்டு பேர்கள் பலியாயினர் என்று தெரியவருகிறது.

17 பேர்களை ஏற்றிவந்த அந்தப் படகில் பிரயாணிகள் அனைவரும் ஒரே பக்கம் சாய்ந்தபோது, கேந்திரம் தவறி படகு கவிழ்ந்தது என்றும், அக்கரையில் நின்றுகொண்டிருந்த சித்தேசுவரம் பஞ்சாயத்துத் தலைவர் வேறு ஒரு நீராவிப் படகு கொண்டுவந்து கவிழ்ந்த படகிலிருந்தோரைக் காப்பாற்ற முயற்சித்தும், ஐந்து பேர்களை மட்டுமே உயிருடன் மீட்க முடிந்தது என்றும் கூறப்படுகிறது.

கல்கத்தா துறைமுகத்தில்

## 'அவசர நிலை'

கல்கத்தா துறைமுக அதிகாரிகள் துறைமுகஎல்லைக்குள் நீடித்து வரும் 'அவசர நிலைப் பிரகடன'த்தை மேலும் இரு மாதங்களுக்குப் பிப்ரவரி 1-ந் தேதி முதல் நீடித்திருக்கின்றனராம்.

கடந்த ஆகஸ்டு திங்களில் சர்க்காரின் அனுமதியுடன் இந்த அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது என்றும், 'டாக்' தொழிலாளர்கள் செய்த 'கிளர்ச்சி'யின் விளைவாகவே இது பிரகடனம் செய்யப்பட்டது என்றும் கூறப்படுகிறது

# 700 பேர் கைது!

பம்பாய், பிப். 2—

அண்மையில் பம்பாய் நகரில் நடைபெற்ற சம்பவங்களின்போது கடைகளைக் கொள்ளையிட்டதாகவும், இதர வர்த்தக நிறுவனங்களைச் சூறையாடியதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு நேற்று மாலை 700 பேர்வரை கைது செய்யப்பட்டிருக்கின்றனர் என்று கூறப்படுகிறது.

நகரில் ஏற்பட்ட கொந்தளிப்பின் திரை மறைவில் கொள்ளையிடப்பட்ட பொருள்கள் பெரும்பாலும் தங்கம் வெள்ளிச் சாமான்கள், சுமார் ரூ. 1,50,000 பெறுமானவற்றைப் போலீசார் கடந்த 48 மணி நேரத்தில் கைப்பற்றியிருக்கின்றனராம். இதுவரை கடைகளைக் கொள்ளையிட்டதாக மட்டும் 600 வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றதாம்.

### சென்னை 12-வது வட்ட தி. மு. கழகச் செயற்குழு உறுப்பினர்களுக்கு

5—2—56 காலை 9 மணிக்குக் கிளைக் கழக இல்லத்தில், செயற்குழுக்கூட்டம் நடைபெறும். பொதுக்குழு முடிவை கிளைக் கழக வட்டத்தில் நல்ல முறையில் செயல்படுத்துவது பற்றியும், மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் குறித்தும் ஆராயப்படும்.

# தேவிகுளம், பீர்மேடு பற்றி தி. மு. க. விளக்கம்

## சென்னை, மாதவரத்தில்

(ஊராண்மைக் கழகத்திற்கருகில்)

4—2—56 சனி மாலை 5-30 மணிக்கு

**ஏ. ஜெயராசு**

தலைமையில்

**ஏ. வி. பி. ஆசைத்தம்பி,**

**இளம்பரிதி**

பேசுவர்

# கழகக் கூட்டம்

### ஆலந்தூர்

(தி. மு கழக 5-ம் ஆண்டு விழா)

தர்மராசா கோயில் தெருவில்

5—2—56 மாலை 5 மணிக்கு

தலைவர்:

எம். ஆர். கோவிந்து

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

இளம்பரிதி

### திருத்துறைப்பூண்டி

தெற்கு வீதியில்

5—2—56 மாலை 6 மணிக்கு

பேசுபவர்:

ஈ. வெ. கி. சம்பத்

### அருப்புக்கோட்டை

(தியாகராய வாலிபர் சங்க எதிரில்)

5—2—56 மாலை 7 மணிக்கு

பேசுவோர்

எஸ். முத்து

எம். எஸ். இராமசாமி

டபிள்யு. டி. துரைசாமி

சிவ. சண்முகசுந்தரனார்

குறிப்பு: பொதுக்கூட்டத்தின்போது மேடைக்கருகில் தி. மு. கழக உறுப்பினர் பதிவும் செய்யப்படும்.

### காஞ்சீபுரம் நகர தி. மு. கழக நிர்வாக உறுப்பினர்கட்கு

5—2—56 காலை 10 மணிக்கு காஞ்சீபுரம் 'திராவிட நாடு' நிலையத்தில், நகர தி. மு. கழக நிர்வாகக் குழு உறுப்பினர் கூட்டம் நடைபெறும். பிப்ரவரி 20-ந் தேதி வேலை நிறுத்தம், கழகச் சந்தா கணக்குகள் மற்றும் பல முக்கியப் பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும்.

### சென்னை—14-வது வட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

5—2—56 காலை 9 மணியளவில் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். பிப். 20-ந் தேதி பற்றிய பொதுக்குழுத் தீர்மானம் குறித்து ஆலோசிக்கப்படும்.

### சென்னை—10-வது வட்ட தி. மு. கழக செயற்குழு உறுப்பினர்கட்கு

5—2—56 காலை 10 மணிக்கு, கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டம் தோழியர் சத்தியவாணிமுத்து இல்லத்தில், (எண். 179, போர்ச்சுகீஸ் சர்ச் தெரு) நடைபெறும்.

நாமக்கல் தாலுகா

## ஆரம்ப ஆசிரியர் 3-வது மாநாடு

5—2—56 காலை 9 மணிக்கு, நாமக்கல் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் தோழர் க. அன்பழகன் தலைமையில் மேற்படி மாநாடு நடைபெறும்.

### நீத்தார் நினைவுநாள்

5—2—56ல், சென்னை இராயபுரம் எண். 60-ஏ., ஆதம்சாயபு தெருவில், புலவர் கி தியாகராசன் தந்தையார் இயற்கையெய்தியது குறித்து நீத்தார் நினைவுக்கடன் நடைபெறும்.

# திருத்தம்

'10—2—56 10-வது வட்டத்தில் அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்' என்று 1—2—56 வெளியீட்டில் வந்துள்ள செய்தியில் 8-வது வட்டம் பெத்துநாயகன் பேட்டையில் சொற்பொழிவாற்றுவார் எனக்கொள்ள வேண்டுகிறோம்.

(ஆ.-ர்)

# என். வி. நடராசன்

சுற்றுப்பயணம்

பிப். 4: சேத்தூர் (தஞ்சை மாவட்டம்)

5: திருவள்ளூர்

8: சென்னை-சேப்பாக்கம்

10: பெத்துநாய்க்கன் பேட்டை

11: ஆரணி

12: திருநள்ளாறு

# கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

பிப். 5: கோவை

11: ஆத்தூர் (சேலம்)

12: திருப்பத்தூர் (வ.ஆ.)

20: சேலம்

22: பட்டிவீரன்பட்டி (பாண்டியனார் நினைவு நாள்)

# திராவிடர் திருநாள்

5—2—56 மாலை 6 மணிக்கு, செய்யார் வட்டம், மேல்மட்டை விண்ணமங்கலம் கிராமத்தில் தோழர் ஏ. கிருட்டிணன் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரன், முகவை ஆர். எஸ். பாண்டியன், டி. தசரதன் எம். எல். ஏ., ஆகியோர் பேசுவர்.

இரவு $9\frac{1}{2}$ மணிக்கு, 'கைதி' நாடகமும் நடைபெறும்.

### திருமணம்

5—2—56 காலை 9 மணியளவில் சென்னை கொண்டித்தோப்பு சக்கரை செட்டி வீதி, எண். 3 இல்லத்தில் தோழர் ம. ரா. எழுமலை—தோழியர் குப்பாபாய் திருமணம் திரு. மயிலை சிவமுத்து தலைமையிலும், தோழர் கா. அப்பாதுரையார் முன்னிலையிலும் நடைபெறும் தோழர்கள் என். வி. நடராசன், இளம்பரிதி, ஏ. கே. வில்வம், சி. ஆர். பாலசுந்தரம், வேந்தன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

### பம்பாய் நடிகர்கட்கு

பம்பாய்—தாராவி தி மு கழகச் சார்பில் விரைவில் நடைபெற இருக்கும் இரு நாடகங்களிலும் நடிப்பதற்கென நடிகர்கள் தேர்வு 5—2—56 மாலை 6-30 மணிக்கு திராவிடரகத்தில் நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.